செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

## இலக்கியப் புலம்

நடத்தும்

# சூழலியல் நோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்

## (Classical Literature in Tamil: An Ecocritical Study)

## பயிலரங்கம் - 9

**(22.09.2022 – 28.09.2022)**

## அறிவிப்பும் அழைப்பும்

சூழல் என்பதற்குச் ‘சூழ்கை’ (Surrounding, encompassing) என்று பொருள் தருகிறது சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி. ‘சூழல்’ என்பது தாவரங்கள், விலங்குகள் ஆகிய உயிரினங்களுடன் மாந்தர்கள் கொண்டிருக்கும் தொடர்பு பற்றிய கூறுகளை உள்ளடக்கிய பொதுச் சொல்லாகக் கொள்ளப்படுகின்றது.

‘சூழலியல்’ என்பது இயற்கைக்கும் மானுடச் சமூகத்திற்கும் இடையேயான ஒத்துறவைப் பற்றிய கருத்தாக்கமாக அமைகிறது. இந்த அமைவின்படி இலக்கியத்திற்கும் சூழலுக்கும் உள்ள உறவினைப் படிப்பதும், ஆராய்வதும் சூழலியல் திறனாய்வு எனச் சொல்லப்படுகிறது.

தொல்காப்பியத்தின் திணை இலக்கண வரையறைகளும், சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களில் காணப்பெறும் உவமை, உள்ளுறை, இறைச்சி போன்ற பாடுபொருள்களும் சூழலியல் கருத்துகளை மிகநுட்பமாக வெளிப்படுத்துவனவாகும். பண்டைய புலவர்கள், தாம் சார்ந்த நிலப் பகுதியை மிக நுணுக்கமாகக் கூர்ந்து நோக்கிப் பாடியிருக்கும் தன்மையைச் சங்கப் பாடல்கள் மூலமாக அறிந்துணர முடிகின்றது.

செவ்விலக்கிய காலத்தில் தோன்றிய நூல்களுள் சூழலியல் இலக்கிய கருப்பொருளைப் பேசிய ஒரே இலக்கியம் சங்க இலக்கியம் மட்டுமே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் வேராக அமைவது தொல்காப்பியம் சுட்டும் முதல், கரு, உரி என்னும் முப்பொருள் பாகுபாடுகளாகும்.

நிலத்தில் விழும் மழைநீர் நிறத்திலும், சுவையிலும் அந்நிலத்துக்குரிய தன்மையைப் பெற்றுவிடும். பின்னர், சுவையில் மாற்றம் ஏதும் நிகழாமல், மெல்லத் தெளிந்து அதன் இயல்பு நிறத்திற்குத் திரும்பிவிடும். இது எல்லா நிலத்திலும், காலத்திலும் நிகழக்கூடிய இயற்கை நிகழ்வாகும்.

விதிவிலக்காகச் செம்மண் நிலத்தில் விழும் நீர் மட்டும், எவ்வளவு காலமானாலும் நிறத்திலும், சுவையிலும் மாறாத் தன்மையைப் பெற்றுவிடும். இயற்கையின் இந்தச் சிறப்பைச் சங்கப் புலவர் ஒருவர் உற்றுணர்ந்து வெளிப்படுத்தியிருப்பார்.

பெயர் அறிய முடியாத அந்தச் சங்கப் புலவர், காதலர்களின் இருமனங்கள் இணைந்து, கலந்து ஒன்றுபட்ட தன்மையைச் 'செம்மண் நிலத்தில் விழுந்த நீர் போன்றது' என்று உவமித்துப் பாடியிருப்பார். நீண்ட காலம் பிரியாது இருத்தலே காதலின் சிறப்பு. அதை நுட்பமாக, அழுத்தமாக உணர்த்த நினைத்த புலவர்க்குக் கிடைத்த சான்று 'செம்மண் நிலத்து நீர்' ஆகும். அப்பாட்டு நாம் நன்கு அறிந்த

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.** (குறுந்தொகை, 40)

என்ற பாடலாகும்.

சூழலியல் புலமைத் திறன் மிகுந்தவர்களாகப் பண்டைய புலவர்கள் விளங்கினார்கள் என்னும் பேருண்மையை இச்சங்கப் பாட்டின் மூலமாகத் தெளியலாம்.

இந்தச் சிறப்பினாலேயே சங்கக் கவிதைகள் அனைத்தும் சூழலியல் கவிதைகள் (Ecopoetry) என்று சொல்லப்படுகின்றன. 'Ecopoetry என்பது ஒரு வலுவான சூழலியல் முக்கியத்துவத்தையோ செய்தியையோ கொண்ட கவிதையாக அமையப்பெறுவது' எனும் கூற்று இங்கு எண்ணுதற்குரியது.

தமிழ்ச் செவ்விலக்கியத்தில் அமையப்பெறும் சூழலியல் கருத்தாக்கத்தை ஆசிரியர்களுக்குப் பயிற்றுவித்துச் சூழலியல் தொடர்பான ஆய்வுகளை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் '**சூழலியல் நோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியம்**' என்ற தலைப்பில் ஒரு விரிவான பயிலரங்கினை நடத்தவுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறை சார்ந்த வல்லுநர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

சூழலியல் ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழி நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

இப்பயிலரங்கமானது 22.09.2022 முதல் 28.09.2022ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 22.09.2022 முதல் 28.09.2022 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து literatureworkshop@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 17.09.2022. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **19.09.2022** அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது.

14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை – 600 100

## இலக்கியப் புலம்

## சூழலியல் நோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்

## (Classical Literature in Tamil: An Ecocritical Study)

**பயிலரங்கம் - 9**

(22.09.2022 – 28.09.2022)

**விண்ணப்பப் படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பதவி/பணிநிலை<br>நிரந்தரம்/தற்காலிகம் | | |
| 3. | பிறந்த நாள்/ வயது | | |
| 4. | பாலினம் (✓ செய்க) | ஆண் [ ] பெண் [ ] திருநங்கை [ ] | |
| 5. | வகுப்பு (✓ செய்க) | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] | |
| 6. | கல்வித் தகுதிகள் | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | |
| 8. | நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |
| 11. | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | | |
| 12. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம்/இல்லை (✓ செய்க) ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | | | | |
| 14. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | ஆம் | | இல்லை | |

நாள் : (கையொப்பம்)

இடம்:

**உரிய முத்திரையுடன்**

**முதல்வர்/பதிவாளர் கையொப்பம்**